## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 289/15 |
| Deposition of witness for | Prosecution wit. PW.4 |
| Name | செய்யது இப்ராஹி ம் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 25-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது காயல்பட்டிணத்தில் குடியிருந்து இறைச்சி கடையில் வேலை செய்து வருகிறேன் . கடந்த 17.07.2012 ம் தேதியன்று பகல் 2 மணிக்கு மேல் எனது உடன் பிறந்த தம்பி செய்து சிலாகுதின் என்பவர் ஆட்டோவில் பயணம் செய்து வந்து கொண்டிருந்த போது செங்கல் ஏற்றி வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். தகவல் அறிந்த நான் தூத்துக்குடி அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது அவர் இறந்து போயிருந்தார் . நான் பிரேத விசாரணையின் போது எனது தம்பியின் உடலை அடையாளம் காட்டினேன்.

சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் . எந்த வாகனம் மோதியது என்றும் அதை யார் ஓட்டினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது . விபத்தை ஏற்படுத்திய விவரம் குறித்து யாராவது சொன்னார்களா என்றால் சொல்லவில்லை.

மறு விசாரணை இல்லை

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC 289 /15 |
| Depostition witness for | of Prosecution wit. PW.5 |
| Name | முத்து |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது ஆழ்வார் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன் . கடந்த 2012 ம் வருடத்தில் ஏரல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க குற்ற எண்.250/2012 வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்து போன சலாவூதின் என்பவரின் பிரேதத்தை இறப்பின் உண்மையான காரணத்தை அறியும் பொருட்டு தூாக்துக்குடி அரசு மருத்துவமனை அரசு சவகிடங்கில் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்த பின்னர் இறப்பின் உண்மை தன்மையை அறியும் பொருட்டு மருத்துவரிடம் சடலத்தின் அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன் பிறகு உடன் இருந்து பிரேதத்தை பெற்று நல்லடக்க செய்ய உறவினரிடம் ஒப்படைத்தேன்.இதே வழக்கில் இறந்து போன அருள் ஷேக் முகமது

என்பவரை கடந்த 19.07.2012 ம் தேதி என்பவரின் பிரேதத்தை இறப்பின் உண்மையான காரணத்தை அறியும் பொருட்டு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை அரசு சவகிடங்கில் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்த பின்னர் இறப்பின் உண்மை தன்மையை அறியும் பொருட்டு மருத்துவரிடம் சடலத்தின் அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன் பிறகு உடன் இருந்து பிரேதத்தை பெற்று நல்லடக்க செய்ய உறவினரிடம் ஒப்படைத்தேன்

குறுக்கு விசாரணை.

நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் பிரேதம் பெறப்படவில்லை என்றும் ஆய்வாளர் சார்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரியின் வேண்டுக்கோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை